NSW Disability Advocacy Futures Program (DAFP)

# NSW எதிர்காலத்திற்கான இயலாமைப் பரிந்துரைத் திட்டம்

## பாடசாலைகள், மாணவ-மாணவிகள் மற்றும் குடும்பங்களுக்கான தகவல்கள்

'NSW எதிர்காலத்திற்கான இயலாமைப் பரிந்துரைத் திட்ட'(NSW Disability Advocacy Futures Program)த்தின் கீழ் இயலாமையுள்ள மாணவ-மாணவிகளுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் பரிந்துரைகள் அளிப்பதற்காக, 'NSW கல்வித் திணைக்கள'(NSW Department of Education) மானது 'NSW சமூகங்கள் மற்றும் நீதித் திணைக்கள'(NSW Department of Communities and Justice)த்துடன் பங்காண்மை மேற்கொண்டுள்ளது.

கல்வி முறைமை மற்றும் பரந்துபட்ட சேவைகள் முறைமை ஆகியவற்றின் ஊடாகப் பயணிக்கவும், அவர்களுடைய தேவைகளைப் பாடசாலைகளுக்குத் தெரியப்படுத்தவும் இந்தத் திட்டமானது இயலாமையுள்ள மாணவ-மாணவிகளுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் ஆதரவுதவி செய்கிறது.

NSW அரச பாடசாலைகளில் ஒவ்வொரு மாணவ-மாணவியும் அறிந்துகொள்ளப்படும், மதிக்கப்படும், பராமரிப்பு அளிக்கப்படும் அனைத்தோரையும் உள்ளடக்கும் கல்வி முறைமை ஒன்றை உருவாக்குவதை இத் திட்டத்தினூடாக நாங்கள் தொடர்கின்றோம்.

## இந்தத் திட்டம் அளிப்பன:

- தொடர்பு கொள்வதற்கான தமது முதல் இடமாகப் பாடசாலையை அணுகுமாறு இயலாமையுள்ள மாணவ-மாணவிகளும், அவர்களது குடும்பத்தினரும் தொடர்ந்து ஊக்குவிக்கப்படுவர். இருந்தாலும், சிக்கல் மிகுந்த பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பொழுது, ஆதரவுதவிக்கான இன்னொரு வழி அவர்களுக்கு இருக்கும்.
- மாணவ-மாணவிகளது கல்வித் தேவைகளுக்கான பதில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பொழுது, தம்முடன் இணைவாய்ப் பணியாற்றுவதற்காக சுயாதீனமான ஆதரவுதவி நபர் ஒருவரை பாடசாலைகளும், இயலாமையுள்ள மாணவ-மாணவிகளும், அவர்களது குடும்பத்தினரும் பெறலாம்.
- கல்வி முறைமை மற்றும் பரந்துபட்ட சேவைகள் முறைமை ஆகியவற்றின் ஊடாகப் பயணிப்பதற்கான உதவியை இயலாமையுள்ள மாணவ-மாணவிகளும், அவர்களது குடும்பத்தினரும் பெறலாம்.

| பகுதி/அமைவிடம் | அமைப்பின் பெயர் | தொடர்பு விபரங்கள் |
|---|---|---|
| Hunter New England, Northern NSW, Mid North Coast | Advocacy Law Alliance Incorporated | P: 1300 365 085<br>W: https://da.org.au/ |
| Western, Far Western NSW | Advocacy Law Alliance Incorporated | P: 1300 365 085<br>W: https://da.org.au/ |
| Southern NSW, Illawarra Shoalhaven, Murrumbidgee | ACT Disability Aged Carer Advocacy Service Limited | P: +61 (2) 6242 5060<br>W: https://adacas.org.au/ |
| Northern Sydney, Central Coast | Action for People with Disability Inc | P: +61 (2) 9449 5355<br>W: https://www.actionadvocacy.org.au/ |
| Western Sydney, Nepean Blue Mountains | Advocacy Law Alliance Incorporated | P: 1300 365 085<br>W: https://da.org.au/ |
| Sydney, South Eastern Sydney | People with Disability Australia Incorporated | P: +61(2) 9370 3100 OR 1800 422 015<br>W: https://pwd.org.au/ |
| South Western Sydney | People with Disability Australia Incorporated | P: +61(2) 9370 3100 OR 1800 422 015<br>W: https://pwd.org.au/ |
| Aboriginal and Torres Strait Islander | First Peoples Disability Network (Australia) Ltd | P: +61 (2) 9267 4195<br>W: https://fpdn.org.au/ |
| Culturally and linguistically diverse communities | Multicultural Disability Advocacy Association of NSW | P: +61 (2) 9891 6400 OR 1800 629 072<br>W: http://mdaa.org.au/ |

உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டால், தயவு செய்து பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள். பாடசாலையுடன் தொடர்பு கொள்வதில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரது உதவி உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவு செய்து **131 450**-ஐ அழைத்து உங்களுக்கு என்ன மொழி வேண்டும் என்பதைச் சொல்லி, பாடசாலையை அழைக்குமாறு தொலைபேசி இயக்குநருக்குச் சொல்லுங்கள். உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரைத் தொலைபேசி இயக்குநர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.

NSW GOVERNMENT